பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் 6 - FEB 1952 குருகுலத் தாள்

வெள்ளிக் கிழமை

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிஷ—4 தருதலம், மாம்பாக்கம்; கா, மார்கழி; 4—1—52. தளிர்—14

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

கால மழை

உலகில், மக்கள் வாழ்க்கையில் நிகழும் துன்பங்கள் எவற்றினும் பசித் துன்பம் மிகவும் கொடிதாகும். குடிப் பிறப்பு முதலான சிறப் பியல்புகளை மக்கள் நினைவினின்று மாய்ந் தொழியச் செய்து இழிவினைத் தேடித் தரும் பசியினைக் கூல வாணிகன் சாத்தனார் 'பசிப்பிணி என்னும் பாவி' என்று கூறுவதில் வியப் பொன்று மில்லை.

பண்ணன் என்னும் ஒரு வள்ளல் 'பசிப்பிணி மருத்துவன்' என்று பண்டைத் தமிழறிஞர்களால் பாராட்டப் பெற்றுள்ளான்.

உணவுக்கு முதன்மையாக வேண்டப் படுவது நல்ல நீராகும். எனைய பொருள்கள் எத்தனையவான சிறப்புக்களைப் பெற்றிருப் பினும், நீரின் துணையின்றி அப் பொருள்களால் உணவு சமைத்தல் எவ்வாற்றானும் இயலாதாகும்.

உலகம் கடல் நீரால் சூழப் பெற்றிருக்கின்றது. கடலினும் பெரிய நீர்நிலை யாண்டும் இல்லை. எனினும் அஃது மக்கள் பசியினைப் போக்குதற்குரிய கருவி யாகாது.

விண்ணினின்று தக்க காலத்தில் மழை பெய்தாற்றான் மக்கள் பசித்துன்பம் நீங்கும். பசித் தீ யடங்கி வயிறு குளிர்ந்தாலன்றி மக்கள் மனவலி குன்றும். வாழ்க்கையில் ஒழுங்கான நெறிகளில் செயல்கள் நடவா. சான்றாண்மை நாட்டில் குன்றுவதோடு புல்லறிவாண்மை வரம்பிகந்து மிகுதல் ஒருதலை. ஆகவே, உலக மக்கள் பசிநோய் அறியாமலும். மனவலி குன்றாமலும் நெறிப்படச் செயலாற்றுவதற்கு முதன்மையானது மழையே என்னும் கருத்து 'வியனுலகத் துண்ணின்றுடற்றும் பசி' என்னும் திருக்குறள் மொழிகளில் விளங்குகின்றது.

———

விண்ணின்று பொய்ப்பின்
விரிநீர் வியனுலகத்
துண்ணின்று டற்றும் பசி.

விண் இன்று பொய்ப்பின்—காலத்தில் மழை இல்லாமல் பொய்த்து விட்டால், விரி நீர் வியன் உலகத்து—கடல் சூழ்ந்த பரந்த உலகத்தில், உள் நின்று உடற்றும் பசி—பசித்தீ உடம்பினுள் இருந்து உயிர்களை வருத்தும்.

விண்—மழை; மேலிருந்து பெய்தலால் வந்த ஆகு பெயர். இன்று—இன்றி; காலத்தில் இல்லையாகி; 'நின்று' எனப் பிரித்து, அதற்குத் தடைப்பட்டு எனப் பொருள் கூறுதல் பண்டை வழக்கன்று.

பொய்த்தல் பெய்வது போலக் காலந் தவறிப் பெய்தல்.

விரி நீர்—கடல்; அதனினும் விரிந்த நீருடையது வேறு இல்லை யாதலின், கடலை 'விரி நீர்' என்றும், நிலத்தை 'வியனுலகம்' என்றும் பெருமையுடன் விளக்கிய து, அவைதாமும், விண் பொய்ப்பின் பயனில்லை என்று இழித்தற்கு.

உயிரின் வினை பசி வடிவில் உடற்றுதலால், 'உள் நின்று' என்றார். அதன் தணிவுக்கு மேல் இருந்து மழை வேண்டுதலின் மழையை 'விண்' என்று முன்னர் விதந்து கொண்டார்.

"மூல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(சென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை 4	கர, மார்கழி, 4-1-52 வெள்ளி	தளிர் 14

மக்களும் சமயமும்

உலகத்தில் அறியாமையைப் படிப்படியாக ஒழித்து நல்லறிவு பல்குதற்கான வழிகளேயே ஒவ்வொரு சமயமும் செய்துள்ளன. இன்றும் செய்து வருகின்றன. அத்தகைய சமயங்கள் பலவற்றுள்ளும் சைவ சமயமே சமயம் என்று அறிவு நூற் கடலின் ஆழத்திற் சென்று நுனித்தாராய்வார் நன்கறிவர்.

சைவசமயத்தின் சிறப்பியல்பு பலவற்றுள்ளும் சிறந்தது, அது பல சமயங்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கும் தன்மையே யாகும். சிவஞானசித்தியார் என்னும் பெரு நூலில் பிற மதங்களின் இலக்கணங்களைக் கூறும் பகுதிகளைக் கூர்ந்து கவனிப்போமாயின் அவ்விலக்கணங்கள் யாவும், சைவ சமயத்தில் ஒரு புடை அடங்கிக் கிடத்தலே உணரலாம்.

"சமய வாதிகள்
தத்தம்' மதங்களே
அமைவதாக அரற்றி
மலைந்தனர்"

என்னும் திருவாக்கினை உன்னுங்கால் ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் மதங்களின் பெருமையை நிலைநாட்ட வேண்டிப் பிறமதங்களை நூல்கள் வாயிலாகவோ அன்றிச் சமய மாநாடுகளில் சொற் போர்களின் வாயிலாகவோ பெரிது முயன்று தடுமாறினர் என்பது தெளிவாகின்றது.

அன்பும் அமைதியும் அடிப்படையாகக் கொண்ட மதமும் மதத்தவரும் எஞ்ஞான்றும் தடுமாற்றம் எய்தியதில்லை. எத்தனையோ இடையூறுகட்கிடையிலும் நிலைகுலைதலின்றி வியக்கத்தக்க நிலையில் உலகில் பெரும் பகுதியில் பரவி நின்று செழிக்கும் சிறித்தவமதம் அடைந்த பெருநிலைமைக் கெல்லாம் காரணம் அதன் அன்பு நெறியும் அமைதியொழுக்கு மல்லவா?

சிறித்தவ நெறிக்குள்ள சிறு பான்மைக் குறைபாடும் நஞ் சைவ சமயத்திற்கில்லை. 'அன்பே சிவம்' என்ற அரிய பெரிய கொள்கையைப் பல்லாற்றானும் தெரிவிப்பது நம் சமயம். உலகில் நிகழும் இரு பெரும் பண்புகளை மூறையே வெப்பமாகவும் தட்பமாகவும், ஆற்றலாகவும் அருளாகவும் பகுத்தினைந்து, இவ் விரண்டும் சேர்ந்த ஒரு பெரும்பொருளையே எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகவும் அம்மை யப்பராகவும் கண்டுணர்ந்து வழிபடுவது நம் சமயம்.

இத்தகைய சைவ சமயத்தின் மாட்சிமையை உள்ளபடி உணராது வேறு சில பல சமயங்களோடு இதனை ஒப்பிடுவதும், பிற சமயங்கள் இதனைக் காட்டினும் எவ்வகையிற் சூழ்ந்தனவாகும் என்று வீணராய்ச் சியிற் பொழுது கழித்தலும், சமயச் சண்டைகளிற் புகுந்து ஆரவாரம் புரிதலும், பயன் சிறிதும் உதவாத சில வீண் திட்டங்கள் வகுத்துச் சைவத்தைப் புரப்பவர் போலப் பாழ் செய்தலும் ஆகிய இத்தகைய நெறிகளில் சிலர் நாட்களைக் கொன்னே கழிக்கின்றனர்.

அருட்பிரகாச வள்ளலார் அமைதி நெறியில் சைவ சமயத்தை நாட்டிற் பரப்ப முயன்றார். ஆரவாரத்தையே விரும்பி நின்ற நாட்டு மக்களிடை அவர் முயற்சி பயன் பெருமல் குறையாகவே நின்றுவிட்டது. அழுகிய சரக்குகளே விற்பனையான நாட்டுச் சந்தையில் அவருடைய புத்தம் புதிய சரக்குகள் விலை போகவில்லை. எனவே 'கடை விரித்தோம் கொள்வாரில்லை' என்ற துயரக் குரலும் அடிகளார் உள்ளத்தினின் றெழுந்தது.

அடிகளார், வழிபாட்டு முறை அமைதியினையே அடிப்படையாகக் கொண்டது. ஆரவார மற்றது. அதே முறை நாட்டில் வரவேண்டும் என விரும்பினர், முயன்றார், முற்றுப் பெறவில்லை

அன்பினை அடிப்படையாகக் கொண்ட நம் சைவ சமயத்தை அமைதி நெறியில், அடிகளார் காட்டிச் சென்ற நெறியில் நாட்டிற் பரப்ப முயன்றால் மிக விரைவில் வெற்றிகாணக் கூடும்.

வடவர் புனைந்த வேத மிருதி, புராண ஆகமங்களை ஒட்டி ஆண்டவனுக்குச் சடங்குகளை அடிப்படையாகக் கொண்ட அருச்சனை வழிபாடுகளுடன், ஆண்டவன் திருமுன் உளமுருகத் தெய்வத் தமிழ்ப் பாக்களை ஓதுதல் மேல். ஆண்டவனுக்கு அருச்சனை பாட்டே யாகும் அல்லவா!

நாகரிகமும் பகுத்துணர்வும் மிக முன்னேறியுள்ள இக்காலத்தில் இத்தகைய அமைதி நெறியை மக்கள் யாவரும் வரவேற்பர் என்பதறுதி. வீண் பழங்கதைகள் எடுத்தோதுவதும் அவற்றால் சமயத்துக் குறுதி தேடுவதும், வெற்றுவாரங்களை நாட்டில் ஒலி பரப்புவதும் ஆகிய செயல்களால் ஒரு காலமும் சைவ சமயத்தை நாட்டில் பரப்ப இயலாது. சைவசமயத்தின் உட்கலந்திருக்கும் இனிய அன்பு நெறியினை, ஆண்டவன் இயல்பினை எம் மதத்து மக்களும் விரும்பும் வகையில் விரிவுரைகள் வாயிலாக நாடெங்கும் பரப்ப முயலுதல் நல்லதாகும்.

(சி. து. க.)

அறிவும் அடக்கமும்

(மதி)

அடக்கமாயிருந்தால் அமைதி ஏற்பட்டுத் தெளிந்த அறிவை அடையலாம். அடைந்த அறிவால் தூய அன்பை நுகரலாம். நுகர்ந்த அன்பால் ஆண்டவன் அருள் பெறலாம். அமைதி நிறைந்து, ஆராய்ச்சியுள்ள அறிவு அடைந்து, தூய அன்பு பொழிந்தால், துன்பத்தைத் துடைக்கும் தோன்றலாகிய இறைவன் அருளைக் காணலாம்.

தெய்வத்தன்மை வாய்ந்த திருவள்ளுவ நாயனார் "செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து, ஆற்றின் அடங்கப் பெறின்" என்றார். அறிய வேண்டியவற்றை அறிந்து நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும் ஆதலால், இயற்கையாகவே தமக்கு வாய்ந்த அமைதிக் குணத்தை மேன்மேல் வளரச் செய்து வருதலே பெண் பிறவி யெடுத்த நல்லார்க்குச் சிறந்த நன்மையாகும்.

நாம் எப்பொழுதும் அடக்கத்தின் காரணமாக நாவின் தன்மையைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். (திருவள்ளுவர்) "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்று கூறியுள்ளார். காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கா விட்டாலும் நாவையாவது காக்க வேண்டும்; அப்படிக் காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர் என்னும் இவ் அருள் உரையை நாம் எப்போதுங் கருத்திற் பதிய வைத்தல் வேண்டும்.

அடக்கத்தால் அமைதிவளரும்; அமைதி ஆராய்ச்சி செய்வதற்கு நல்ல துணை செய்யும். ஆராய்ச்சி அடிப்படை அறிவு. அதை வளர்க்க நாம் கல்வியில் ஊக்கமாக இருத்தல் வேண்டும். கல்வி கற்கக் கற்க அறிவு ஆழமாய்ச் செல்லுகிறது; தன்னைத் தான் காத்துக் கொள்ளத் தற்காப்புக் கருவியாக உதவுவது அறிவு. திருவள்ளுவநாயனார் "அறிவுடையார் ஆவதறிவார் அறிவிலார் அஃதறி கல்லாதவர்" என்று அருளிச் செய்துள்ளார். அறிவுடையார்க்கும், அறிவிலார்க்கும் வேறுபாடு என்ன? அறிவுடையவர் எதிர் காலத்தில் நிகழப் போவதனை முன்னே எண்ணி அறிவர்; அறிவில்லாதவர் அதனை அறியார் ஆதலின் அடக்கமும் அறிவும் அனைவர்க்கும் இன்றியமையாதன. மாதர்க்கு இவை மிகவும் கட்டாயம்.

சிலப்பதிகாரம்

12. திருமுகம் விடுத்தல்

முத்துசாமி '

இளந்தென்றலும், குயிற் குவுதலும் இளவேனில் வந்ததனை அறிவித்தது. அவ் இன்னிள வேனிலைத் தமிழ் நாட்டு மன்னர்க்கு இன்பந் தரும் துணைவனுகிய இளவேனில் என்கிறார் ஆசிரியர். அங்ஙனம் தமிழ் நாட்டு மன்னர்களைக் கூற வந்த விடத்து நாட்டின் எல்லையைக் குறிப்பிடுகிறார்.

"நெடியோன் குன்றமும்
தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த
தண்புனல் நன்னாட்டு"

என்ற அடிகளால் தமிழ் நாட்டு எல்லை கூறியதறிக. அதாவது, வடக்கே திருவேங்கட மலையும் தெற்கே குமரிக் கடலும்எல்லை என்பதாம். கிழக்கிலும் மேற்கிலும் வேறு நாடின்மையாலும், கடலே யுள்ளமையாலும் எல்லை கூறவில்லை. தெற்கில் பல காவத தூரத்துக்கு வளமான நாடிருந்து கடல் கோளால் ஆழ்ந்து விட்டமையால் அந் நிலப் பரப்பைத் தன்னகத்தே கொண்ட குமரிக்கடலைத் தெற்கு எல்லையாகக் கூறினர். இக் காலத்துச் சேரநாடு மலையாள நாடாயிற்றுனமையால் மேற் கெல்லையாகப் பொதிகையைக் கூறுவர். இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகிய தொல்காப்பிய நூற் சிறப்புப் பாயிரத்தில் "வடவேங்கடந் தென்குமரி, ஆயிடைத், தமிழ் கூறு நல்லுலகத்து" என்று கூறப்பட்டிருப்பதாலும், எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகிய நன்னூற் சிறப்புப் பாயிரத்தில் "குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடவுள்" என்று கூறப்பட்டிருப்பதாலும், இக்காலத்துப் புலவராகிய பாரதியார் "நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று நித்தந் தவஞ் செய் குமரியெல்லை—வட மால வன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு" என்று கூறியிருப்பதாலும் பண்டு தொட்டு இன்று வரை தமிழ்நாட் டெல்லை வேங்கட மலையும் தென்குமரியும் என்பது தெரிகிறது.

அனைத்திந்தியாவும் ஓராட்சியில் இருந்தபோது எப்படியோ ஆட்சியாளர் வசதிக்கேற்ப நாடு பகுக்கப்பட்டிருந்தது. இப் பொழுது மொழி வழி 'மாகாணம்' பிரிக்க வேண்டு மென்ற நிலை வரும்போது முன்னைய முறைப்படி பிரிக்க வேண்டியதுதான் முறை என்பதை மேற் குறிப்பிட்ட சான்றுகளும் பிறவும் வலியுறுத்தும்.

எப்படியோ மேற்கெல்லை பொதிகை மலையளவும் சுருங்கி விட்டது. வடக்கிலும் சுருங்கும் படியான முயற்சியில் ஆந்திரர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். இப்படி சுருங்கிக்கொண்டு போகத் தமிழர் இடங் கொடுத்து வெறும் வாய்ச்சொல் வீரராய் இருந்தால் நம் தமிழ் நாட்டின் நிலையும் தமிழ் மொழியின் நிலையும் என்னும்? நம் பிற்காலத்தவர் நம்மை நாட்டு நினைவின்றிக் கொன்னே காலங் கழித்தவர் என்று பழி கூறவோ இடங் கொடுப்பது?

ஆகவே, மொழிவழி மாகாணம் பிரியுங் காலத்து வடவேங்கடம் தென்குமரி தமிழ் நாட்டெல்லை யென்பதை நேரிய முறையில் வெற்றி காணும் வரை வற்புறுத்தல் வேண்டும்.

நெடியோனுய் நின்ற திருக்கோலத்தோடு திருமால் வேங்கட மலையில் விளங்குவாதலால் அம் மலையை நெடியோன் குன்றம் என்றார். தொடியோள் பௌவம் என்றது குமரிக் கடலை. குமரிக் கடல், எங்கிருக்கிறது என்று இக்கால மாணவனைக் கேட்டால் 'பூகோள' படத்தைத் தூக்கித் தூக்கிப் பார்த்துவிட்டு இப் பூவுலகில் இல்லை யென்பான்! குமரிக்கடலை 'இந்து மகா சமுத்திரம்' என்று வழங்குகின்றனர். தமிழ் நாட்டினருகே இருக்கும் கடலுக்குத் தமிழ் நாட்டின் நினைவு வரும் வகையில் பெயரிடாமல் வடமொழியில் பெயர் கொடுத்து வழங்குகின்றனர். மேற்குக் கிழக்குப் பக்கக் கடல்களும் தமிழ் நாட்டை நினைவூட்டும் பெயருடையனவாயில்லை. தமிழர் மாட்சி கடல் கடந்த வெளி நாடுகளிலும் பரவியிருந்த காலம் போய் அருகே யிருக்கும் கடலில் கூடத் தமிழர் மாட்சி தெரியாத காலமாய் இன்றைய நிலை இருக்கின்றது!

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

தமிழ் நாட்டு மன்னர் மகிழ்ந் துணைவனுகிய இளவேனிலைப் பேச வந்து, எல்லையில் உணர்ச்சி வசப்பட்டு நெடிது சென்று விட் டோம்.

கடற் கானலிலிருந்து தனித் தேகிய மாதவி நிலாமுற்றத்து ஆசனத் தமர்ந்து யாழினைக் கையில் ஏந்திச் செம்பாலை யென் னும் பண்ணைக் கண்டத்தாலும் யாழிலிட்டும் பாடுகையில் அதற் குப் புறம்பானதோர் பண்ணில் மயங்கினள். காரணம் உள்ளம் ஒரு நிலையிலில்லாமையே. கோவ லன் நினைவு அவள் உள்ளத்தை விட்டகலா திருந்தது. இள வேனிற்கால மானதால் தனித் திருக்க ஆற்றுளாய்ச் சண்பகம் முதலிய பூக்களால் தொடுக்கப் பட்ட மாலையின் இடையே யுள்ளதொரு தாழை வெண் தோட்டில் பித்திகையரும்பால் திருமுகம் எழுதித் தன் தோழி வசந்தமாலை மூலம் கோவல னுக்கு விடுத்தனள். அவள் எழுதி யதனை ஆசிரியர் "எண்ணெண் கலையும் இசைந்துடன் போக .....வினையா மழலையின் விரித் துரை எழுதி" என்று புகழ்வ தால் அதனைச் சிறிது நோக்கு வோம்.

"மன்னுயி ரெல்லாம்
மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில்
இளவா சாளன்;
அந்திப் போதகத்
தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும்
செவ்விய னல்லன்;
புணர்ந்த மாக்கள்
பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள்
தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின்
நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ
தறிந்தீ மின்னென"

இளவேனில் என்பான் ஓர் இள வரசன். இன்னும் நெறிப்பட ஆளும் முறையில் கற்று முதிரா தவன். ஆகவே நேரிய முறை யில் ஆளமாட்டான். திங்களுஞ் செல்வனும் கோட்ட முடையவ னுதலின் (கோட்டம்—வளைவு) செவ்வியனல்லன். ஆகவே கூடிய மக்கள் சிறிது நேரம் தனித்திருந்தாலும் கூடாத மக் கள் தந் துணைவரை மறந்தாலும் காமன் நறும்பூ வாளியால் நல்லுயிர் கொள்வன். இது ஒரு வியப்பன்று. இதனை அறிந் தருள்க.

இவ்வாறு முற்றுத மழலைச் சொல்லால் தன் னியல்பான முறையில் எழுதி வசந்த மாலையை அழைத்து அத் திரு முகத்தைக் கோவலனுக்குக் கொடுத்து, அதன் பொருளை யெல்லாம் விளக்கிச் சொல்லி அழைத்து வருகவென விடுத் தனள்.

அவ்வாறே அதனைக் கோவலனி டம் வசந்தமாலை கொடுப்ப, நாடக மகளாதலின் பலவாறும் நடித்தல் அவளுக்கு இயல்பு என்று கூறித் திருமுகத்தை மறுத்துவிட்ட னன். வசந்தமாலை வாடிய உள்ளத்தோடு அதனை மாதவிக் குரைத்தனள்.

தான் ஒரு குற்றமும் செய் தறியாதவளாதலால் எப்படியும் கோவலன் வருவான் என்றே மாதவி எண்ணினுள். "மாலை வாரா ராயினும் காலை காண் குவம்" என்று கையற்ற நெஞ் சினளாய் அமளிமிசை நித்திரை பொருந்தாதிருந்தனள்.

குருகுலத்துக்கு - - - வாழ்த்து

திருவள்ளுவர் உலகப் பெரி யார். உலகத்துக்கு ஒருவர் கடவுள் என்பதுபோல் இவரும் ஒருவர். அதனால், இவருக்கும் 'தேவர்' என்று பெயருண்டு. ஆகவே, திருவள்ளுவர் வாக்கு, தேவ வாக்கு.

கடவுள் எல்லார்க்கும் பொது வானவர். திருவள்ளுவரும் எல்லார்க்கும் பொதுவான வாழ்க்கை வேதம் அருளிச் செய் திருக்கின்றார்.

சாதி மதம் நாடு மொழி நிறம் முதலிய எவ்வகை வேற்றுமை யும் கடந்து, எவ்வகைப் பற்றும் இன்றி, எவ்வகைச் சார்புந் தொடராமல், தூய உண்மையள வாக வாழ்க்கையைக் கடைப் பிடிக்க முந்தும் உண்மையாளர்க் குத் திருவள்ளுவர் ஒருவரே உல குக்கு வழி காட்டி!

உலகத் தலைவர்கள் மன மாரப் பின்பற்றும் பெருங் குரவராய் உயர்ந்து நின்றவர், எல்லாக் காலத்திலும் திருவள்ளு வர் ஒருவரே!

மாம்பாக்கம் குருகுலம் தெய் வத் திருவள்ளுவரின் ஆதினம்! அதனால், அது, உலகு முழுவதும் இணங்கிப் பணிபுரிந்து நலம் பெறும் சிறப்பு வாய்ந்தது! குருகுலப் பணியாளர் இக் காரணங்களால் உலகப் பணி யாளராய் உயர்கின்றனர்.

'மன்பதைப் பணி அலுவலகம்' 'உலகோர் யாத்திரைத் தலம்' 'உலக குருபீடம்' என்பது, குருகுலத்துக்கு நன்கு பொருந் தும்படி, ஆதிகுரு திருவள்ளுவ ரும் ஆதிபகவனும் அருள் புரிவா ராக!

—குருகுலத்தார்

கூட்டு வழிபாட்டுக் குரல்!

செய்வது என்?

(புல்)

கோணுது செய்வோர் இருப்பின் செயப்புகுதற்குள்ள செயல்கள் எண்ணில. செய் என்கிற சொல்லின் முன்பாகப் பணி என் றெலிப்பதாகவே உள்ளது. அப் பணி தொண்டு ஒன்றி னூலேயேதான் உய்ய முடியும்; உயர்ந்து போகவும் முடியும். ஆயின் அப் பணிதான் என்னே என்பதை உணர வேண்டும்.

மேலும் எது செய்தற்கு முன்பும் ஆண்டவர் விருப்பத்தைத் தெரிந்துகொள்ளுவது தான் சிறப்பு. என் செய்வது என்று அவரை வினவுவதாகக் கொள்வோமாயின் வரும் பதில் என்னே? அங்ஙனம் யாராகிலும் எப்போதாவது கேட்டு விடை பெற்றுள்ளார்களா? உண்டு.

'இனி என் செய்கோம். 'இது செய்க என்றருளாய்' என்று அருளடியார் குறையிரந்த விடத்தெல்லாம் ஆண்டவர் பணித்தது "நம்மைப் பாடுக" என்பதேயன்றே!

இது தவிர்த்தியான் என தென்பதற்று மோன பரானந்தத்தில் திளைத்திருக்கும் மெய்ஞ்ஞானத்தவ யோகிகளே யணுகி நிற்பேற்கு வழியருள வேண்டுமென்போமாயின், அவர் இயல்பாய் மௌனித்து நிற்பர். அந் நோக்கை யுணராமல் மேலும் வற்புறுத்துவோமாயின் 'சும்மாயிரு' என்று பொருளறியாமல் அறியும் பொருட்டு விடையிறுப்பர். எவற்றிற்கும் கைம்மேல் பலன் வேண்டும் எனும் இக் காலப் போக்கில் சும்மாவிருந்தால் சோறு வருமா வழிபாடு வயிற்றுக்குதவுமா? என்றல்லவா கேள்விகள் பிறக்கும்!

சும்மா விருத்தலின் சுகம் தன் (ஆன்மா) னியல்பில் கருவி காரணங்களின் தொழிலற்று, அமைதியாய், தங்கு தடையின்றி நிற்போர்க்கன்றே தெரியும்.....
.....இன்பத்தின் பிறப்பிடம் (சுகம்) சும்மாயிருத்தலின்கண் என்று தாயுமான அடிகள் ஓதுகின்றார்.

சும்மாவிருக்கும் எல்லையுள் புகுதல் எளிதாயில்லை. மிகவும் அரிது. இதன் அருமைப் பாட்டினை நம் தாயுமான அடிகளே "கந்தக மதக்கரியை வசமா நடத்தலாம்" என்ற பாடலால் இனிது விளக்குகின்றார். இவ்வாறு கூறுதலின் காரணத்தைக் கருதப் புகின், மனோவிகாரம் (சஞ்சல புத்தி) ஒரு நிலைத்தன்று; மனம் ஒரு குரங்கினை ஒப்பது, அதிலும் அதனைக் கட்குடித்துப் பேய் பிடித்தத் தேள் கொட்டிய ஒரு குரங்கிற்கன்றே உவமை கூறியுள்ளார்கள். அதனால் அதன் செயலைத் தடுத்த அடக்குதல் எளிதாமோ? என்பதாம்.

உலகம் இன்றுள்ள நிலை என்ன? தனி மனிதன் வாழ்விற்கு முதன்மைப் பொருளாம் உணவு, உடை, உறையுள் ஆகியவை தேவையான அளவு கிடைக்கின்றில. எங்கும் யுத்த அலறல்; எங்கணும் அமைதியின்மை; தன்னலம், பொய்க் கஞ்சாக் கயமை, பொறுமை, தராசை ஒப்புரவின்மை, பிறர் குற்றமே பேசுதல் மயக்கப் பொருள்களில் மயக்கம் ஆகிய போலி வாழ்வில் மக்கள் உழன்று வருகின்றனர். நன்னினைவுகளும், நற் செயல்களும் பெருகுதற்கு மாறாக வெறும் மேலறிவு கீழ் நோக்கியே போய்க்கொண்டிருக்கிறது. உள்ளத்தில் ஈரம் (அன்பு) அற்றுவிட்டது. நகைமுக வாழ்வு மேலிட்டது. ஆதலின் இது சீர்திருத்தம் புக வேண்டிய நேரம்; பேசுதலைக் குறைத்துக்கொள்ளவேண்டிய நேரம்; மக்கட்கு மாக்கள் என்ற பழிச்சொல் நீங்கவேண்டிய நேரம்; உண்மை வாழ்விற்குப் பயன்தரும் வகையில் அடிப்படைக் கல்வித் திட்டம் மாற வேண்டிய நேரம்.

நம் முதுகெலும்பு நேராக அமைந்திருப்பதால், பிற உயிரினங்களைவிட மேன்மை பெற்றுளோம் என்று மட்டும் கூறிப் பெருமை கொள்ளத் தெரிந்து கொண்டிருக்கிறோம். அதனைப் போற்றி வாழும் வகைதெரிந்தும் கொன்னே பொழுதைக் கழிக்கின்றோம். இது பித்தத் தன்மை.

'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்றபடி நாடு நலமுற நாமும் நலம் பெறுவோம். நலம் நிகழ வேண்டுமாயின் நன்னினைவு, நற் செயல் பெருக வேண்டும் அந்நினைவும் அழுந்திய நிலைப்பாக இருக்க வேண்டும். இதற்கு நம் ஆன்

ரூர் வகுத்த முறை உண்டு. அதுதான் தொழுகை என்னும் வழிபாடாகும்;

அத் தொழுகை வெறும் பகட்டிற்காகச் செய்வதன்று ஆகலின் அது உள்ளம் நெகிழ்ந்து கரைந்து தானற்ற விடத்து நிகழும் செயல். இதைத் தனித்தும் சேர்ந்தும் செய்யலாம். எவ்வாறுயினும் செய்யவேண்டிய கட்டாயம், எப்போதும்,முக்கியமாக இப்போதும் உண்டு.

கூட்டு வழிபாடு சிறுமைக் கொருமுறை நடத்துவது எளிது. ஈழ நாட்டில் பல துறைப்பட்டவர்களும் சேர்ந்து வார வழிபாடு நடத்தி வருவது சிறப்புக் குரியது. வார வழிபாடு கீழ்க்கண்ட முறைப்படி நிகழுமாயின் நல்லது.

1. வகுத்த நாளன்று பொதுவான இடத்தில் குறித்த நேரத்தில் காலந் தாழாது அனைவரும் அமைதியாகக் கூடவேண்டும்.

2. பின்பு சிதறிய மனம் குவிதற் பொருட்டு யாதொரு தெய்வத்தையும் சிறப்பிக்கா வகையில் ஓர் சமரச கீதம், கருத்துடன் ஒத்த குரலில் அனைவரும் படனம் செய்தல் வேண்டும்.

3. மூன்று வினாடிகள் நன்றாக நிமிர்ந்து உண்மைப் பொருளைப் பற்றிச் சிந்தித்த வண்ணமே நிற்றல் வேண்டும்.

4. தம்மை யொத்த மன்பதையும், பிற உயிரினங்களும் குறை நீக்கி அச்சமின்றி அமைதியுடன் வாழ உண்மையுடன் ஒருவர் சொல்ல ஒவ்வொருவரும் சிந்தித்தல் வேண்டும்.

5. அனைத்துயிர்க்கும், அனைத்துலகிற்கும் தனித்தனியவும் ஆண்டவன்றன் அருள் வேண்டி வழிபாட்டினைச் சிறப்புடன் முடித்தல் வேண்டும்.

இக் கூட்டு வழிபாட்டிற்குகந்த இடம் ஆலயமாகவே கருதப் பெறுகின்றது. கூட்டு வழி பாட்டால் பிணித்துன்பம் ஒழியுமென்று குரான் சாற்றும் போது நம்மவர் ஏன் அதைக் கைக் கொள்ளலாகாது. இவ் வழிபாடு குறைவின்றி செம்மையாக உண்மையில் நிகழுமாயின் பெரும்பயன் உண்டாவது உறுதி. மாறுபட்ட உலகும், மனமும் திருந்த வழி ஈதே. இக் கடைப் பிடியால் யுத்தக் குழப்பம் நீங்கி உலகு சேமமுறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மனம் செம்மை யுற்றால் மருந்தும் வேண்டற் பாலதோ!

ஓங்குக வழிபாடு! ஆழ்க தீயன வெல்லாம்.

'மூல்லைக் கொடி' நேயர்க்கு

5-10-51— லிருந்து 'மூல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் இது) தொடங்கி நடந்துவருகிறது

சென்ற ஆண்டுக்குக் கையொப்பம் எந்த மாதம் அனுப்பியிருந்தாலும், சென்ற ஆண்டுடன் அது முடிவெய்தும். இதழ்கள் சேராமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண்டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்களாக!

செய்தியாளர்.

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

நம்பிக்கை பெற்ற
ஆயுர்வேத உதவிகள்

காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை

கர்ஜன்
கோரோஜனே மாத்திரை

பாலக்ஸ்
பேதியாக மாத்திரை

சிசுராக் குழந்தை டானிக்

பிமலெக்ஸ்டானிக்

யூடினல்
கர்ப்பிணிகளுக்கு

டோனடெல்
பிரசவமானபின் டானிக்

ஹிஸ்மெனே டானிக்

பிரதமென்ஸ்
ஆதாகோளாருகளுக்கு

யுனைடெட் கன்வர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

சிந்திய கருத்துக்கள்

(பெரிய புராண விரிவுரையில்)

'மயிலை ந. இராமலிங்கம்'

1. அருள் தனித்தத்தன்னியல்பில் நிற்கிறபோது அதிகம்; அது பொருளளவில் இயங்கும் போது ஆற்றல் குறைவு. அருள் தூலத்தில் காந்தம் என்று பெயர் பெறுகிறது.

2. இறைவன் தன்னியல்பில் இருக்கும்போது சூரிய ஒளியைப்போல் அதிக ஆற்றல் உள்ளவன். சூரிய ஒளி சந்திரன் மூலம் பிரகாசிக்கும்பொழுது ஆற்றல் குறைவா யிருப்பதைப் போல், இறைவன் தூல உலகத்தில் இறங்கும்போது அவன் ஆற்றல் குறைவாகக் கிடைக்கின்றது.

3. அகந்தூய்மையும் புறந்தூய்மையும் ஒருங்கேவேண்டும்; புறந்தூய்மை நீரால் உண்டாக்கலாம். அகந்தூய்மை உண்மையினாலேதான் உண்டாக்க முடியும். சத்திய வாழ்க்கையில் ஈடுபட்டால் மனம் தூய்மை அடையும்.

4. முனிவர்க்கு தசை வலிமை இராது; மன வலிமை அதிகம். உடல் வலிமையால் செய்ய முடியாததையும் மன வலிமையால் செய்ய முடியும். உடல் பலத்தைவிட உண்மையின் பலத்தால் எதையும் சாதிக்கலாம்.

5. ஒருவர் கருத்து அவர் உரிமை; ஆதலின் அது தமது கருத்துக்கு மாறுபட்டு இருப்பினும் பிணக்குக் கொள்ளாது மதிப்புக் கொடுத்தல் நல்லது.

6. பாற்கடலில் உண்டான நஞ்சின் வெப்பத்தால் அஞ்சி ஓடிய அனைவரையும் காக்க, இறைவன் தன்னலம் கருதாது அந்நஞ்சை உண்டார். பிறர்க்கென வாழும் நிலையிலேதான் "நீல கண்டன்" என்று பெயர் பெற்றார். ஆதலால் ஞானசம்பந்தர் திருச்செங்கோட்டில் அடியார்க்குக் காய்ச்சல் உண்டான போது திரு நீலகண்டப் பதிகம் பாடிக் காய்ச்சலை நீக்கினர். இடர் தீரப்பாடிய பதிகமாதலின் தம் இடர்தீரத் திரு நீலகண்டப் பதிகத்தை உருக்கத்துடன் பாடுவோர்க்கும் பயன் உண்டு.

7. வினைத்தாக்குதலால் உண்டாவது இடர். பிறர்க்கென வாழும் முறைமையால் வினைத்தாக்குதலைக்குறைக்கலாம்.

8. நோய் உண்டாகிறபோது முதலில் மருந்து தேடுவதைவிட அருளைத் தேடுதல் சிறப்பு; அடுத்து மருந்து தேடவேண்டும். பிறர்க்கென வாழும் குணம், நல்ல பார்வை, நல்ல கேள்வி முதலிய வற்றாலும் தம் நோயைக் குறைக்கலாம்.

9. அருள் சூக்குமம்; மருந்து தூலம். சூக்குமத்தில் தீர்ப்பது பெரிய நிலை; தூலத்தால் தீர்ப்பது மிகச் சாதாரண நிலை.

10. மலர் ஒரு பொருள், அதன் மணம் ஒரு தெய்வ நிலை; தேன் ஒரு பொருள், அதன் தித்திப்பு ஒரு தெய்வ நிலை; இறையருள் எல்லாப் பொருள்களிலும் இங்ஙனம் கலந்திருக்கின்றது.

தருதல வளர்ச்சி

குருகுல மாணவர்களே திருக்குறட் கருத்துக்களைத் தழுவி மாம்பாக்கத்தில் அதன் ஒவ்வோர் அதிகாரத்தையும் செயற்படுத்த முன்வர வேண்டும். என்ற ஆசிரியர் அவர்களின் குறிப்பினை ஒட்டி அண்மையில் சைதை திரு. க. மா. தங்கவேல் அவர்களும், இப்போது வண்ணை திருமதி. சரசுவதி நடேசன் அவர்களும் முன் வந்து உழவு, ஆள்வினை உடைமை முதலிய அதிகாரங்களைச் செயற்படுத்த முனைந்திருக்கின்றனர். இவர்களின் ஆண்மையும், தொண்டார்வமும் மிகவும் பாராட்டத்தக்கன. இவர்கள் வரவால் குருகுலத்தின் முன் பின் வளர்ச்சிகளும் திட்டங்களும் உருப்பெறத் தொடங்கியிருக்கின்றன.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)